இவ் வாரத்தில் இருந்து விலை
ரூபா 20.00ஐ
செலுத்தி மலைமுரசை வாங்கி வாசியுங்கள்

ஆவணி மாதம் 10ம் திகதி August 26, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 05 MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# அந்தரத்தில் அவுஸ்திரேலியக் கனவு பிடிபடும் படகுப் பயணிகள்

கடந்த 20ம் திகதி இரவு கடலில் பயணித்த சந்தேகத்துக்கிடமான படகுகளிலிருந்த மக்களைக் கைது செய்தது திருகோணமலைக் கடற்படை. அப் படகுகளிலிருந்து கைதுசெய்யப்பட்ட அனைவரும் அவுஸ்திரேலியாவிற்கு பயணித்ததை உறுதிப்படுத்தியிருந்தனர். படுக்கை, 10ம் இலக்கம், நிலாவெளி, மடத்தடி போன்ற பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த இவர்களுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் இருந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இவர்களுள் குடும்பங்களாக சிறுகுழந்தைகளுடன் பயணித்த சிலரும் இருந்துள்ளனர். இவர்களைக் கைதுசெய்த இலங்கைக் கடற்படை பின்னர் திருக்கோணமலைக் காவல்த்துறையினரிடம் கையளித்துள்ளனர்.

கைக்குழந்தைகளுடன் இருந்த சிலர் பிணையிற் செல்ல உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் பெருமளவு பெற்றோரும், உற்றோரும் தமக்குரியவர்களைப் பிணையில் விடுவிப்பதற்காக திருக்கோணமலை நீதிமன்ற வாசலில் 22ம் திகதி காத்துக்கிடப்பதை எமது நிருபர்கள் பதிவுசெய்துள்ளனர். அன்று மாலை கைது செய்யப்பட்ட அனைவருக்கும் பதின்நான்கு நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவு திருக்கோணமலை மாவட்ட நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்க மறியலில் இவர்கள் தடுத்து வைக்கப்படவுள்ளனர்.

(8ம் பக்கம்)

# முஸ்லிம் காங்கிரஸ் உடன் இணைவோம் - த.தே.கூ ஒப்பந்தங்களின் அடிப்படையில் யாருடனும் இணைவோம் - ஸ்ரீ.மு.கா

களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. இரா. சம்பந்தன் அவர்கள் கணிசமான ஆசனங்களைத் த.தே.கூ பெறுமிடத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சிமைக்க இருப்பதாக தெரிவித்திருந்தார்.

எங்களுக்கும் ஸ்ரீ.மு.காவுக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் கணிசமான ஆசனங்களை நாம் பெற்றால் ஸ்ரீ.மு.கா சேர்ந்து ஆட்சியமைக்கும் வாய்ப்புக்கள் உள்ளன என தெரிவித்த சம்பந்தன் தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் அரசுடன் எத்தனையோ சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருந்த போதும் அரசு நழுவல் போக்கைக் கடைப்பிடித்தபடியால் தான் இன்று தமிழர் பிரச்சனையை சர்வதேசத்திற்கு த.தே.கூ கொண்டு சென்றுள்ளது எனத் தெரிவித்தார்.

(8ம் பக்கம்)

ஆனால் காத்தான்குடியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஸ்ரீ.மு.காவின் இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதியமைச்சரும் மு.காவின் தவிசாளருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்த கருத்தானது அரசின் கூட்டமைப்பாயிருந்தாலென்ன, தமிழ்க் கூட்டமைப்பாயிருந்தாலென்ன எவருடனும் நாம் முஸ்லிம்கள் ஏமாற்றப்படாத ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே இணைவோம் எனும் பொருள்படத் தெவித்திருந்தார். மேலும் தேவையேற்படின் எதிர்க்கட்சியிலிருந்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

யாருடன் இணைவது என்பது பற்றி எந்தவொரு வார்த்தையினையும் ஸ்ரீ.மு.கா வின் தலைவர் தற்போது வரை பேசாத நிலையில் த.தே.கூ வின் தலைவர் சம்பந்தர் அவசர அவசரமாக தாம் ஸ்ரீ.மு.காவுடன் சேர்ந்து ஆட்சியமைப்போம் எனக் கூறியிருப்பது பல்வேறு மன உணர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

## வாக்கெண்ணும் நிலையங்கள்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருக்கோணமலை மாவட்ட வாக்குகள் மூன்று நிலையங்களில் எண்ணப்படுகின்றன. திருக்கோணமலை, மூதூர், சேருவில் ஆகிய மூன்று தொகுதிகளின் வாக்குகளும் பின்வரும் நிலையங்களில் எண்ணப்படுகின்றன.

சேருவில வாக்குகள் திருக்கோணமலை மாவட்ட செயலகத்திலும் திருக்கோணமலை மற்றும் மூதூர் வாக்குகள் திருக்கோணமலை விபுலானந்தாக் கல்லூரியிலும் எண்ணப்படுகின்றன.

## கையளித்தனர் படையினர்

(8ம் பக்கம்)



திருக்கோணமலை மாவட்டம் வெள்ளைமணல் பிரதேசம் கருமலையூற்று கிராமத்தில் இரண்டு வருடங்களின் பின்னர் பள்ளிவாசலில் தொழுகை மேற்கொள்ள படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2010 ம் வருடம் ஏற்பட்ட ஒரு அசாதாரண நிலையை அடுத்து படையினரால் இப்பள்ளிவாசலில் தொழுகை நடத்த அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

## தொடரும் நீர்த் தட்டுப்பாடு

தொடரும் வரட்சியின் காரணமாக திருக்கோணமலை மாவட்டம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நகர்ப்புற பிரதேசங்களிலும் தொடர்ச்சியான நீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது. திருக்கோணமலையில் இடம்பெற்று வரும் பெருந்தெருப் புனரமைப்புக்களாலும், திருக்கோணமலைக்கு பிரதானநீர் வழங்கியாகவுள்ள கந்தளாய்க் குள நீர்மட்டம் குறைந்து வருவதாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஏலவே மழையில்லாத காரணத்தால் கிணறுகளின் நீர்மட்டம் குறைந்துள்ளதால் உவர்மலை, லிங்கநகர் மற்றும் அன்புவழிபுரம் போன்ற பிரதேசங்கள் மோசமான நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆனந்தபுரியில் பொதுக்கூட்டம்.

அபிவிருத்தி என்ற பெயரால் இளைஞர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற நிலையில் தமிழ் மக்களின் காணிகள் பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற நிலையில் தமிழ் மக்களின் வரலாறுகள் பொய்யாக்கப் பட்டுக்கொண்டிருக்கிற நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர் கொள்ளத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

(8ம் பக்கம்)

NEW ADMISSION FOR ACADEMIC YEAR 2012-2013
JULY - SEPTEMBER 2012
NEW ADMISSION WILL BE ISSUED FOR
➡PLAY GROUP
➡LKG ➡ UKG ➡ STEP 1 ➡ GRADE 01 - 08
OUR PAST ACTIVITIES

GREENWICH INTERNATIONAL SCHOOL
#23,GREEN ROAD,TRINCOMALEE. T.P-026 2226818, 0774123672 EMAIL :- GISTRINCOMALEE@GMAIL.COM
GREENWICH EDUCATION ACADEMY (PVT) LTD. (REG NO PV 76073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருகோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்பது எம் வாழ்வில் பின்னிப் பிணைந்ததோர் சொற்றொடர் ஆகும். கட்டுப்பாடற்ற கடலில் கப்பலை ஓட்டிய தமிழன் தொடங்கி கடலைத் தம் கட்டுப்பாட்டினுள் வைத்து கப்பலை ஓட்டிய கடற்புறாக்களையும் எமது வரலாறு கொண்டுள்ளது. கடலைத் தாயாகக் கவிஞர் பாடியபோது, கடலை யமனாகக் பாடிய தமிழ்க் கவிகளையும் கொண்டது எம் இனம்.

இன்று கடலூடாக அவுஸ்திரேலியப் பயணம் செய்ய முயற்சித்துக் கைது செய்யப்படும் பெருமளவு எண்ணிக்கையான இலங்கைத் தமிழர்களைக் கண்ணுறும் போதெல்லாம் பெருஞ் சினமும், கவலையும் எழுகின்றது. அடிமை வாழ்வும், ஏழ்மையுமே இதற்கான முக்கிய காரணங்கள் எனக் கூறப்பட்டாலும், அடிப்படைக் காரணம் அவையல்ல என்பது எமக்குத் தெரியும். பணமுழைக்க வேண்டும் எனும் ஆர்வமே அதற்கான முக்கிய காரணியாய் இருக்கின்றது. தற்போதைய காலகட்டத்தில் வெளிநாட்டவர் நூற்றுக்கணக்கில் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்கள் செலவு செய்யும் விதம் இங்குள்ள இளைஞர்களை வாய் விரிய வைத்துள்ளது. வெளிநாட்டுவாழ்வின் ஒரு பகுதியை மட்டுமே எண்ணிக்கொள்ளும் இவ் விளைஞர்கள் உயிர் கொடுத் தோடியும் அவுஸ்திரேலியா சேர் எனும் புது மொழியிற் செயற் படுகின்றனர்.

அவுஸ்திரேலியா புதிய சட்டங்களை எம்மவர்க்காகக் கொண்டு வரவுள்ளது. மக்கள் நடமாற்றமற்ற, அபிவிருத்தியடையாத, நாகரீகமற்ற மனிதர்களுள்ள தீவுகளுக்குள் எம்மவரை இருக்க வைப்பதற்கான கடும் பிரயத்தனங்களை அவ்வரசு மேற்கொண்டுள்ளது. அவ்விபரம் ஆங்கில ஊடகங்களூடாக வெளித் தெரிய வருகின்றது. மீளவும் நாம் போய் அங்கு அடிமை வாழ்வையே வாழ வேண்டும் என்பதை புரிந்துகொள்ளுங்கள். அத்துடன் திருமலையிலுள்ள பெரிய மனிதர்கள் சிலரின் ஆசியுடன் நிகழும் இச் செயலில் வறிய மக்களின் எஞ்சிய பணமும் இப் பணமுதலைகளிடம் போய்ச் சேர்ந்து விடுவதே இறுதியாக நடக்கின்றது.

எனவே எம் உறவுகளே! எதிர்காலத்தை நினைத்து நிகழ்காலத்தை தொலைத்து விடாதீகள் என்பதே மலைமுரசின் வேண்டுகோளாகும்.

-ஆசிரியர்-

## திருமலை லியோ கழகத்தின் நுளம்புகளுக்கு எதிரான பரப்புரைகள்




நுளம்புகள் தினத்தை முன்னிட்டு 20 ஆகஸ்ட் 2012 அன்று திருக்கோணமலை லியோ கழகத்தினால் திருமலை நகரம் எங்கும் நுளம்புகளினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி விழிப்புணர்வு பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் லியோ கழகத்தினர் நுளம்பு வேடம் அணிந்து மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளுக்கு சென்று துண்டுபிரசுரம் விநியோகித்தும், வாய் மொழி பிரச்சாரம் மூலமும் தங்கள் பரப்புரைகளை மேற்கொண்டனர். இந்த பரப்புரை நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை திருகோணமலை நகர லயன்ஸ் கழகத்தின் லியோ கழகத்துக்கான ஆலோசகர் Lion.B.உதயசங்கர் அவர்கள் வழங்கி இருந்தார். இவ்வாறன வித்தியாசமான முயற்சிகளை சமூக ஆர்வலர்கள் பெரிதும் பாராட்டினர்.

## திருமலை பொதுவைத்தியசாலைத் தாதி உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பு



திருக்கோணமலை பொதுவைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

திருக்கோணமலை பொதுவைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் தங்களது சீருடைக்கு ஒப்பாக சீருடை அணிவது தங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் தாதிமார்களுக்கும் சிற்றூழியர்களுக்கும் வித்தியாசம் தெரியாது இருப்பதாகவும் தெரிவித்தே இவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் நோயாளர்கள் பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். கடந்த வெள்ளிக்கிழமையும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## நீங்கள் அவுஸ்திரேலியா செல்ல ஆசைப்படுபவரா? முதலில் இதைப் படியுங்க

அவுஸ்திரேலியாவில் அகதித் தஞ்சம் கோரும் நோக்குடன் வருபவர்களின் மனுக்களை பரிசீலனை செய்து முடிவு மேற்கொள்ளும் வரை அவர்களை அவுஸ்திரேலிய எல்லைக்கு அப்பால் உள்ள வேறு பல நாடுகளில் தடுப்பு முகாம்களில் தங்க வைக்கும் ஒரு சட்டத்துக்கு அந்நாட்டு பாராளுமன்றத்தின் கீழவை அனுமதி அளித்துள்ளது.

இந்தச் சட்டம் இப்போது மேலவையான செனட்டின் ஒப்புதலுக்காகச் செல்கிறது. அங்கும் அதற்கு அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சட்டத்தின் கீழ் அகதித் தஞ்சம் கோருபவர்களின் மனுக்கள் நரௌ மற்றும் பப்புவா நியூகினியாவில் பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

அகதித் தஞ்சம் கோருபவர்களின் மனித உரிமைகள் மீறப்படுவதாக கவலைகள் எழுந்த நிலையில், நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், முன்னாள் பிரதமர் கெவின் ரட் இந்த முகாம்களை மூடினார்.

அவுஸ்திரேலிய எல்லைக்கு அப்பால் உள்ள நாடுகளில் இந்த அகதிகள் தங்க வைக்கப்பட்டு அங்கேயே அவர்களின் மனுக்கள் பரிசீலனை செய்யப்படுவதன் மூலம், அவுஸ்திரேலியாவில் குடியேற வருபவர்களை தடுக்கும் நோக்கிலான ஒரு கடுமையான நடவடிக்கையே இது என அதன் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

இந்தோனேசியாவிலிருந்து படகு மூலம் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலியாவில் குடியேறும் நோக்குடன் வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்தே இந்த நடவடிக்கை வந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(பீபீசி)

## திருக்கோணமலையில் வேட்பாளர் இருவர் விலகினர்.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் கூட்டணி என்ற பெயரிலான அரசியல் கட்சியின் வேட்பாளர்களாக போட்டியிடும் இருவர் தாங்கள் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளனர். பன்குளம் பகுதியைச் சேர்ந்த வேட்பாளர் ஆர். கிருஷ்ணன், அகில இலங்கை தமிழ் கூட்டணியின் திருக்கோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் கா. விக்னேஸ்வரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்

தற்போதைய அரசியல் சூழ் நிலைகள் காரணமாகவும், தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையுடன் ஒன்று பட்டு வாக்களிக்க வேண்டிய நிலையை மக்கள் விரும்புவதாலும், அம்மக்களின் வாக்குகளைப் பிரிக்காதிருப்பதற்காக போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடித்தின் பிரதியை திருக்கோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கும் வேட்பாளர் கிருஷ்ணன் அனுப்பியுள்ளார்.

அகில இலங்கை தமிழ்க் கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடும் கட்டைப்பறிச்சான் வடக்கைச் சேர்ந்த பத்மநாதன் பத்மலதா என்ற பெண்ணும் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிக்கையொன்றை விடுத்திருக்கிறார். திருக்கோணமலை மாவட்டத் தமிழ் மக்களே என்ற தலைப்பிலான அவ்வறிக்கையை கட்டைப்பறிச்சான் நலன்புரி நிலையச் செயற்பாட்டுக் குழுவில் இரண்டு உறுப்பினர்கள் முன்னிலையில் வேட்பாளர் பத்மலதா உறுதிப்படுத்தியுள்ளார். அவர் அறிக்கையில்

கடந்த ஏழு வருடங்களாக இடம் பெயர்ந்து வாழும் சம்பூர் பிரதேச மக்களுக்காக அயராது உழைத்து வரும் சம்பூர் பிரதேச இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தலைவர் கு. நாகேஸ்வரனுக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்பதை எனது அபிப்பிராயமாகும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

கு. நாகேஸ்வரன் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளராக போட்டியிடுகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிருஸ்ணன் கோவில் கொடியேற்றம்.



திருக்கோணமலை மடத்தடி அருள்மிகு ஸ்ரீ ருக்மணி தாயார் ஸ்ரீ சத்தியபாமா தாயார் சமே ஸ்ரீ கிருஸ்ணபகவான் ஆலய வருடாந்த மஹோற்ஸவம் 20.08.2012 திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து நாட்கள் இடம் பெறும் இம் மஹோற்சவத்தின் தேரோட்டம் 29.08.2012 புதன் கிழமை அன்று நடைபெறும்.



சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் திரு பி.டபிள்யு. கொடிப்பிலி அவர்கள் 18.08.2012ல் திருக்கோணமலை மாவட்ட விளக்கமறியல் சாலைக்கு வருகை தந்து அதன் தற்போதைய நிலைமையை ஆராய்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது என்னும் குறிக்கோளைப்பற்றிக் கடந்த பதிப்பில் கதைத்திருந்தோம். இனி எவ்வாறு? எனும் வினாவிற்கான விடையைப் பற்றிப் பேசுவோம்.

எது என்னும் குறிக்கோளைப்பற்றிக் கடந்த பதிப்பில் கதைத்திருந்தோம். இனி எவ்வாறு? எனும் வினாவிற்கான விடையைப் பற்றிப் பேசுவோம். ஒரு காலப்பகுதியில் தமிழரின் பிரச்சனைக்குத் தீர்வாகத் தனிநாடும் அத் தனிநாட்டை எவ்வாறு அடைய வேண்டும் என்பதற்கான விடையாக ஆயுதப் போரும் மட்டுமே காணப்பட்டது. இவ்விரண்டையும் தவிர்த்து வேறு எத்தீர்வையும் ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பை அவ் ஆயுதப் போரை முன்னின்று வழிநடத்தியவர்கள் ஏற்றுக் கொள்ளவேயில்லை. அதனை ஏற்றுக் கொள்ளாமல் விட்டிருந்தால் மட்டும் பரவாயில்லை. வேறு தீர்வுகளை வேறு வழிகளூடாக அடைய முயற்சித்த அனைவரும் துரோகிகளாக்கப்பட்டு அவர்கள் சுட்டும் கொல்லப்பட்டனர். இறுதியில் அந்த அமைப்பும் அதைச் சார்ந்து வாழ்ந்த மக்களும் ஒட்டு மொத்த அழிவைச் சந்தித்த பின் மிகப்பெரும் தலைமைத்துவ இடைவெளியை தமிழர்கள் தாங்கி நிற்கின்றனர். அவ் இடைவெளியை நிரப்ப முனையும் த.தே.கூட்டமைப்பு தமிழர் பிரச்சனைக்கான தீர்வை எவ்வாறு எட்டமுனையப் போகின்றது என்பதே இங்கு பேசுபொருள் ஆகின்றது.

ஒரு தீர்வினை எட்டும் முயற்சியானது தனியே ஒரு பக்கச் சார்பானது என்பதல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள் தீர்வை எட்ட முயற்சிக்கும் இரு தரப்புக்களையும் மட்டும் அது சார்ந்திருப்பதில்லை என்பதைப் பூகோளமயமாக்கம் (Globalization) எமக்கு அறியத் தந்துள்ளது. உலகின் அளவு மாறாதிருக்க உலகின் எல்லைகளைத் தகர்த்த பூகோளமயமாக்கம் நிதிப் பொருளாதாரத்தின் அல்லது முதலாளித்துவச் சந்தையின் விரிந்த கரங்களுக்குள் உலக நாடுகள் யாவற்றையும் அகப்படுத்தும் விரல்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இவ் உலகமயமாக்கலால் இலங்கையின் கண்டு கொள்ளப்படாத கிராமமொன்றில் வெடித்த குண்டுகளின் அதிர்வலைகள் உலகமெங்கும் கேட்கத் தொடங்கியபோதே தமிழர்கள் தாங்கி நின்ற ஆயுதப் போர் அவர்களுக்கு எதிராகவே செயற்படத் தொடங்கிவிட்டது. எனவே தான் தீர்வை எட்டமுயற்சிக்கும் தரப்புக்கள் இரண்டையும் தவிர்ந்த ஏனைய உலகமும் இங்கு மூன்றாம் தரப்பாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. இவை தவிர புறக் காரணிகளின் போக்கையும் அளவிட வேண்டிய தேவை தீர்வை எட்ட விரும்பும் தரப்பிற்கு/ தரப்புகளுக்கு இருக்கின்றது. எனவே கீழ்வரும் வரிப்படம் இந் நிலமைகளைத் தெரிந்திருப்பதைக் காணலாம்.




இங்கு பிரதேசம் 'அ' வைக் கருத்திற் கொண்டால் அங்கு இரு தரப்பினரிடையேயும் நம்பிக்கையின்மையையும் அதனால் தீர்வு காணும் முயற்சிகளில் தோல்வியடைவதையும் காணலாம்.

பிரதேசம் 'ஆ' வானது தமிழர் தீர்வுக்கான உலகம் நோக்கிய முனைப்புக்களில் தமிழர் தரப்பு பலவீனப்பட்டுப் போயிருப்பதையே காட்டுகின்றது. நன்றாகக் கவனித்தால் த.தே.கூட்டமைப்பின்

உலகம் நோக்கி விரிவதில் மிகப் பலவீனப் பட்டிருப்பதைக் காணலாம். இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் த.தே.கூட்டமைப்பு தமிழர் பிரச்சனையை சாதகக் கண்கொண்டு பார்க்கும் நாடுகளுக்கான தமது ஆதரவைத் திரட்ட முனைவதை விட தமிழர் பிரச்சனையை காது கொண்டே கேட்க மாட்டோமென இருக்கும் நாடுகளை நோக்கிய தமது நகர்வை ஆரம்பிக்க வேண்டும். முக்கியமாக சீனாவையும், இரஸ்யாவையும், கியூபாவையும், பாகிஸ்தானையும் நோக்கிய நகர்வினை த.தே.கூட்டமைப்பு இப்போதே ஆரம்பிக்க வேண்டும். இப்பந்தியில் எழுதுவது போல் அதொன்றும் சுலபமான காரியமல்ல. ஆனால் இயலாத காரியமுமல்ல.

இனி பகுதி 'இ' யை நோக்குவோமாக இருந்தால் பேரினவாதத் தரப்பிற்கும் உலகத்திற்கும் இடையேயான தொடர்பு சாதகமான மற்றும் பாதகமான தன்மையைக் கொண்டு காணப்படுவதைக் காணலாம். இச்சாதக, பாதக தன்மைகளை நிர்ணயிப்பவையாகப் புறக்காரணிகளே காணப்படுகின்றன. உதாரணமாக அமெரிக்கா தமிழர் தரப்பின் மீது சிறிதேனும் அனுசரனை காட்டினால் நியாய அநியாயங்களுக்கு அப்பால் அமெரிக்க குரோத மனப்பான்மையால் பேரினவாத தரப்பிற்கு ஆதரவு தெரிவிக்கும் ஈரான், கியூபா போன்ற நாடுகளின் போக்கினை நிர்ணயிப்பது புறக்காரணிகளே ஆகும். மேலும் பொருளாதார மந்தம் வேறு நாடுகளில் ஏற்படும் அழிவுகள் போன்றவற்றைப் புறக் காரணிகளாய்க் கொள்ளலாம். மிகச் சிறந்த புறக்காரணிக்கு உதாரணமாக இரட்டைக் கோபுரத் தாக்குதலையும் அதைத் தொடர்ந்து எமது போராட்டத்தின் மீது விழுந்த சாதகமற்ற சூழலையும் குறிக்கலாம்.

எனவே தமிழர் தரப்பு எவ்வாறு பிரச்சனைக்கான தீர்வை எட்டப்போகின்றது எனும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை ஆராய்ந்தாகிவிட்டது.

இனி த.தே.கூட்டமைவின் உள்ளகக் கட்டமைப்புக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் எனப் பார்க்கலாம் ... வரும் வாரத்தில்.

- மாயன் -

# நடந்து முடிந்தது அரங்காடல் - வெளி 05







திருக்கோணமலை கலை கலாசார அபிவிருத்தி மையத்தின் அரங்காடல் வெளி – 05, 19.08.2012 ஞாயிறு மாலை 4 மணிக்கு தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இரண்டாவது மாத மூன்றாவது ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் அரங்காடல் 19.08.2012 ஞாயிறு மாலை தனது வெளி – 05 இல் பதிந்தது. "அதிகரித்து வரும் இயந்திரத்துவம் மிக்க பொருளாதாரம்சேர் வாழ்க்கையில் சத்தமில்லாது இழக்கப்பட்டுக் கொண்டு வருகின்ற மரபு ரீதியான கலை கலாசாரங்களை நினைவூட்டிக் கொண்டே மீட்டெடுப்பதுடன் புதிய தொழினுட்பங்களை உள்ளீர்ப்புச் செய்து நிகழ்கால வருங்கால கலை கலாசாரங்களையும் சேர்த்துப் பாதுகாத்தல்" என்ற நிலை பேண் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து ஐந்தாவது முறையாக இந்நிகழ்வு இடம்பெற்றது.

"விருப்புடையோர் எல்லோரும் வருக" என்ற முன்னனிய அறைகூவலுடன் மட்டுப்பாடில்லாத கலைஞர்களையும், ஆதரவாளர்களையும் உள்ளீர்க்கும் அரங்காடல் மேடை மதகுகளை அனைவருக்கமாய் உடைத்துள்ளதுடன் தன் நகர்வை எவருக்கும் ஊறிலா வகையில் செய்து வருகின்றது.

தொடர்ந்து நடைபெறும் இவ்வரங்காடல் இரண்டு மாதங்களுக்கொருமுறை தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டப வாயில்களை எல்லோருக்கமாய்த் திறப்பதனூடாக திருக்கோணமலையின் சமூக, பொருளாதார, தொழினுட்ப மற்றும் இலக்கிய சமூகத்தின் புதிய கதவுகளைத் திறந்து கொண்டும், திறந்து கொள்ளக் காத்திருக்கின்றது என்பதும் மறுதலிக்க முடியாத திண்ணம்.

அத்தோடு அரங்காடல் வெளி - 06 எதிர்வரும் 21.10.2012 அன்று நடைபெறுவதோடு அன்று தன்னுடைய ஒருவருட பூர்த்தியை நிறைவு செய்கின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

செம்பியன்

### மலைமுரசுக்கு நிருபர்கள் தேவை

மலைமுரசு பத்திரிகைக்கு பிரதேச பத்திரிகை நிருபர்கள் தேவை. கொடுப்பனவுகள் வழங்கப்படும் விருப்புடையவர்கள் உங்கள் சுய விபரக் கோவையை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கோ, தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றதும் கற்றதும்

சில விடயங்களை பகிரங்கமாகவும் மனந்திறந்து பேசுவதாலும் சிலருக்கு என்னைப் பிடிப்பதில்லை, அதையிட்டு நான் கவலைப்படுவதும் கிடையாது, என்னைப் பொறுத்தவரையில், மனிதத்துவத்தை நான் மதிப்பவன், அங்கீகாரத்துக்கு அலைய வேண்டிய அவசியமில்லை, என்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக பேய்களுடன் சமரசம் செய்து கொள்ள நான் முயலுவதில்லை. இதனை எனது தலைக்கணம் என நீங்கள் அர்த்தம் கொண்டால் நான் ஒன்றுமே செய்யமுடியாது.

இளைய தலைமுறை என்னை வாழ்த்த வேண்டும், முதிய தலைமுறை என்னை புகழவேண்டுமென்கிற விருப்பம் எனக்கு இல்லை. முப்பதிற்கு உட்பட்ட சிறுகதைகளும், இரண்டு நாவல்களும், இரண்டு குறுநாவல்களும் இருபதிற்கு மேற்பட்ட கவிதைகளும் சில கட்டுரைகளும் தான்... எனது எழுத்துக்கள் இம் என்னும் முன் இருநூறும் முன்னூறும் படைக்கக்கூடிய ஆற்றல் என்னிடமில்லை நான் ஒரு படைப்பாளி என்பதை விட ஒரு வாசகனாக இருப்பதிலே பெருமை கொள்பவன். எழுத்துலகத்தில் யாருடைய துணையுமின்றி புத்தகங்களின் துணையோடு காலடி வைத்தவன். என்னவோ மக்களை கற்றதினால் எனது படைப்புகள் எளிமையாக இருக்கின்றன. அவர்கள் புரிந்து கொள்வதற்காக எனது படைப்புகளை நிதானமாகச் செய்கிறேன். அதற்கான பலாபலனை நான் பெற்றுக் கொண்டுள்ளேன். என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குச் சில நண்பர்கள் இருக்கிறார்கள், அவர்கள் என்மீது அக்கறையுள்ளவர்கள் போல் நடிக்கிறார்களென்பதை நான் அறிந்து வைத்துள்ளேன். என் மீதான மிகுந்த பொறாமையுடன், எரிச்சலும் அவர்களுக்கு இருக்கிறது. எனக்குக் கிடைக்கும் மரியாதையில் அவர்கள் பங்கு பெற முயலுகிறார்கள், தங்களைச் சார்ந்தவன் நானென என்னைத் துணைக்கழைக்கிறார்கள். எப்படித்தான் இவர்களை விட்டுத்தூர விலகினாலும் வந்து ஒட்டிக்கொள்கிறார்கள்.

வ.அ. ஏன் இவர்களோடு ஒட்டுறவு இல்லாதிருந்தார் என்பதை நான் இப்போது உணர்கிறேன். எனது வயதிலிருந்து தங்களது பெயர்கள் உச்சரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். எப்படியாவது தங்களுடைய புகைப்படங்களோ, செய்திகளோ நாளாந்தப் பத்திரிகைகளில் வரவேண்டுமெனத் தவண்டை அடிக்கிறார்கள். அதற்காக விபச்சாரிகள் போல் எல்லோருடனும் உறவாடுகிறார்கள் அதற்கு நான் என்ன செய்வது கள்ளர்களுடனும், காடையர்களுடனும் சந்தர்ப்பவாதிகளுடனும் அறிவிலிகளுடனும் என்னால் கூட்டுச் சேர முடியவில்லை.

நன்றி என்ற வார்த்தையின் அர்த்தம் எனக்கு விளங்கும் அதற்கான நன்றியை நான் தெரிவிப்பதற்கு தயங்க மாட்டேன் எனக்குச் செய்த உதவிக்காக அவர்களது கொள்கைகளை தவறென்று உணர்ந்து கொண்டு ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

எனது 45. வருட இலக்கிய அனுபவத்தில் இரண்டே இரண்டு சிறுகதைத் தொகுதிகளே என்னால் வெளியிட முடிந்துள்ளது. அதற்குக் கூட பிறருடைய உதவி எனக்குத் தேவைப்பட்டது.

இழப்பின் வேதனைகள், நோயின் தாக்கம் என்னை மோத, வீழ்த்த முனைகின்றது. பெரும் கடனாளியாக வாழ்கிறேன். ஆயினும் சோரவில்லை.

அகதிமுகாம் வாழ்க்கையை நிகர்த்ததே எனது வாழ்க்கை.

சென்ற நத்தார் தினம் எனது தகரக் கொட்டைகைக்கு வந்த சில சிறுவர்கள். "தாத்தா நீங்கள் ஏன் பாலன் குடில் வைக்கவில்லை" என்று என்னைக் கேட்டார்கள் நான் கூறினேன் "தாத்தா இருப்பதே ஒரு மாட்டுக்கொட்டில் தான் இதை விட என்ன வேணும்" என்றேன்.

எனவே தந்தக் கோபுரக் கற்பனைகள் எனக்கில்லை. என் படைப்புகளின் எளிமைக்கு என் வாழ்வே சாட்சியங்கள் தோழர் மா.ஓ. கூறியது போல் குளிர்காலத்தில் பட்டிடைகளில் அதிக பூ வேலைப்பாடுகள் பற்றி அக்கறை கொள்வதை விட குளிர்காய்வதற்கான நல்ல விறகுகளைத் தேடுவதே எனது விருப்பமாகவும் இருக்கிறது.

நன்றி என்ற வார்த்தை பற்றிப் பிரஸ்தாபித்தேன். அல்லவா சமீபத்தில் எனக்கேற்பட்ட ஒரு சம்பவத்தை இவ்விடத்தில் நினைவு கூறலாம் என எண்ணுகிறேன். மனிதாபிமானம் சகோதர உணர்வு - இது பற்றியெல்லாம் கவிதைகள் பாடும் பெரும் கவிஞர் அவர்... மேடையில் கவிதையால் பார்வையாளர்களைக் கட்டிப்போடும் வல்லமை பெற்றவர். சோ. என மழை கொட்டுவது போல் சரமாரியாக வார்த்தைகளை அடுக்குமொழியில் அள்ளித் தெளிப்பார். கலாபூசணவிருது, ஆளுனர் விருது எல்லாம் பெற்றுக் கொண்ட அரச ஓய்வூதிய ஆசிரியர் அவர் தாம் கற்றதையும் பெற்றதையும் ஒரு நூலாக்கி வெளியிட இருந்தார்.

அவரது நூலில் பத்தோடு பதினொன்றாக எனது பெயரும் போகடிபோக்காகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வளவுக்கும் அவரது முதல் நூலுக்கான அவர் பற்றிய அறிமுகக் குறிப்பை நானே எழுதியிருந்தேன்.

மேற்படி நூல் வெளியீட்டு விழா பற்றி அன்றைய தினம் வரை எனக்கு அழைப்புக் கிடைக்கவில்லை யாரோ கூறி அதனை நானறிந்த போது எப்படியும் அழைப்பின்றி போவது என நான் முடிவெடுத்திருந்தேன்.

வரவேற்புரையை ஒரு குழந்தைக் கவிஞர் நிகழ்த்துவதாகவும், வெளியீட்டுரையை முன்னைய நாள் மேலதிக கல்விச் செயலாளர் ஆற்றுவதாகவும், நயவுரையை ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் நிகழ்த்துவதாகவும், நன்றியுரையை ஆலங்கேணிக் கவிஞர் ஒருவர் செய்ய இருப்பதாகவும் அறிந்தேன்.

பகல் 12 மணிக்குத் திடீரென ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. 3 மணி நிகழ்விற்கு வெளியீட்டுரை நிகழ்த்துபவரும், அறிமுக உரை நிகழ்த்துபவரும் வரமாட்டார்கள் என்ற செய்தியோடு எனக்கென அழைப்பிதழும் கொண்டுவருவதாக தொலைபேசியில் பேசிய அன்பர் கூறிவிட்டு சிறிது நேரத்தில் என்னிடம் அழைப்பிதழும் கொண்டு வந்து சேர்த்தார்.

பகல் 1 மணி மீண்டும் அதே நபர் தொலைபேசியில் அழைத்தார். நான் நூலாசிரியர் வீட்டிலிருந்து பேசுகிறேன்.... இரண்டு உரைஞர்கள் வராத காரணத்தினால் அதில் ஏதாவது ஒரு உரையை நீங்கள் நிகழ்த்த வேண்டும் இது நூலாசிரியரின் விருப்பம் என்றார்.

நான் எதுவித பதட்டமும் இன்றி நிதானமாக கூறினேன்.

அழைப்பிதழே.. இப்போதுதான் கிடைத்தது. புத்தகத்தை கண்ணால் கூடக் காணவில்லை... ஒரு புத்தகம் தந்தால்... வெளியீட்டுரையை.. நான் நிகழ்த்துகின்றேன். ஒரு சக எழுத்தாளன் வெளியீட்டு விழாவில் அவமானப்படுவதை நான் விரும்பமாட்டேன் இடைவெளியை நிரப்ப நான் சித்தமாயுள்ளேன் எனக் கூறினேன்.

புத்தகம் உடனடியாக என் கையில் கிடைத்தது. 3 மணிக்கு முன்னரே நான். மண்டபத்திற்கு வந்து விட்டேன். கூட்டம் ஆரம்பமாகிவிட்டது. அதிதிகளுடன் நானும் நயவுரையாற்ற தற்செயலாக நியமிக்கப்பட்ட சஞ்சிகை ஆசிரியரும் மேடையில் அமர்ந்திருந்தோம்.

வரவேற்புரையை மிகவும் தெளிவாக நிகழ்த்தத் தொடங்கிய குழந்தைக் கவிஞர் மேடையிருந்த எங்கள் இருவரையும் தவிர அழைப்பிதழில் குறிப்பிட்ட விழாவுக்கு வராத பிரமுகர்கள் உட்பட அனைவரையும் பெயர் சொல்லி வரவேற்று அமர்ந்தார்.

மேடையிலிருந்த எனக்கு மிகவும் சங்கடமாயிருந்தது. எமது பெயர் குறிப்பிடாமையினால் அழையாவிருந்தாளிகளாக பார்வையாளர்கள் எம்மைக் கருதக்கூடிய ஆதங்கம் என்னுள் ஏற்பட்டது. என்னோடு தொடர்பு கொண்ட அன்பர் நிகழ்வின் தொகுப்பாளராக இருந்தார். நடந்த விடயங்கள் அனைத்தும் அவர் அறிந்திருந்தமையால். தலைமையுரையைத் தொடர்ந்து

**-நந்தினி சேவியர்-**

(மிகுதி பக்கம் 6ல்)

## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கானது - 2013

ACA
44/2,3, வித்தியாலயம் வீதி திருகோணமலை
0263263511/0262227408

சரியான விடையின் கீழ் கீறிடுக.

(01) வெள்ளைப்பசு பசிய புல்லை மென்று விழுங்கியது. இவ்வாக்கியத்தில் வரும் செயப்படுபொருள் அடைமொழியாது?
1. வெள்ளை 2. பசிய 3. மென்று

(02) கல் என்ற சொல்லுக்குரிய பன்மைச் சொல் வடிவம் யாது?
1. கற்கள் 2. கல்கள் 3. கட்கள்

(03) கருங்கூந்தல் என்னும் சொல் சரியாகப் பிரித்தெழுதப்பட்டுள்ள முறை யாது?
1. கருங் + கூந்தல் 2. கறுப்பூ + கூந்தல் 3. கருமை + கூந்தல்

பின்வரும் சொற்கூட்டங்களில் பொருத்தமற்ற சொல் இடம்பெறும் சொல்வரிசையை இனங்கண்டு அதன்கீழ் கீறிடுக.

(04)
1. மிளகாய், வெண்டி, கத்தரி, தக்காளி, பயிற்றை
2. சட்டி, பானை, குவளை, பாத்திரம், கறிமூடி
3. தென்னை, பனை, கமுகு, மூங்கில், வாழை

(05)
1. கப்பல், வள்ளம், தோணி, படகு, கட்டுமரம்
2. வலை, தூண்டில், அத்தாங்கு, உபகரணம், கரப்பு
3. சுறா, திருக்கை, சீலா, சூரை, பாரை

(06)
1. கிராமம், பிரதேச செயலகம் , மாகாணம் , நாடு
2. கிராமம், மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவு, மாகாணம், நாடு
3. கிராமம், பிரதேச செயலகப் பிரிவு, மாவட்டம், மாகாணம், நாடு

(07)
1. இரும்பு, வெள்ளி, பித்தளை, தங்கம்
2. இரும்பு, பித்தளை, வெள்ளி, தங்கம்
3. இரும்பு, பித்தளை, தங்கம், வெள்ளி

(08) சத்தியானந்தா சாமியிடம் இருந்த 50 சத நாணயங்களினதும் 1.00 நாணயங்களினதும் மொத்த எண்ணிக்கை 15 ஆகும் இரண்டு நாணயங்களினதும் பணப்பெறுமதி சமனாயின் 50 சத நாணயங்களின் எண்ணிக்கை யாது?
1. 5 2. 10 3. 8

(09) கத்தி என்பது 967 ஐக் குறிக்கும் எனின் திகதி என்பது பின்வருவனவற்றில் எதனைக் குறிக்கும்?
1. 769 2. 779 3. 797

(10) சம அளவு இடைவெளியில் வட்டமாக நடப்பட்டிருந்த 20 கம்பங்களில் இரண்டு கம்பங்களுக்கிடையிலான தூரம் 10m எனின் இருபது கம்பங்களுக்கிடையில் உள்ள மொத்தத்தூரம் யாது?
1. 200m 2. 190m 3. 180m

கீழ் கூட்டிற்குள் தரப்பட்ட எழுத்துக்களையும் இலக்கங்களையும் அவதானித்து 11ஆம் 12ஆம் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

AYAZR53MP7QR2668SVL9RNX47BC85

(11) மேலே இடம் பெற்றுள்ள எழுத்துக்கள் எத்தனை?
1. 12 2. 17 3. 15

(12) கூட்டிற்குள் இடம் பெற்றுள்ள இலக்கங்கள் எத்தனை?
1. 17 2. 14 3. 12

BEEFORT INTERNATIONAL SCHOOL
Admissions For Academic year Sep 2012 / 2013
Play Group to Grade One upwards

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையின் தேசிய பிரதிநிதிகள்.




உலகம் ஏதோ தன் பாட்டில் சுழன்று கொண்டுதான் இருக்கிறது. தோன்றல், திரிதல், கெடுதல் என இலக்கண வரன்கள் போல இயற்கை நியதிகளும் தமக்கான கடமைகளை நிறைவேற்றிய வண்ணமே இருக்கின்றன. இதிலிருந்து மனித புலத்தை அதன் முனைப்புக்களை வேறுபடுத்திக் கொண்டிருக்கும் மலைமுரசு இவ்வாரம் சக்தி தொலைக்காட்சியின் " The Debater " என்ற மாபெரும் விவாதப்போட்டியில் அகில இலங்கை ரீதியாக தெரிவாகப்பட்டுள்ள அணிகளுள் பதினாறு இடங்களுக்குள் காணப்படும் தேசிய அணிகளின் வரிசையில் திருக்கோணமலை மாவட்டத்தை பிரதிநிதிப்படுத்தும் " தி/ புனித மரியாள் கல்லூரியினது விவாதக் குழுவை அறிமுகம் செய்கிறது.

சக்தி தனியார் தொலைக்காட்சி ஊடகம் நடாத்தும் "The Debater" விவாதப் போட்டிக்கு திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து 32 பாடசாலை அணிகள் பங்கு கொண்டன. இதில் முதலாவது தெரிவுச் சுற்றில் (05.09.2012 அன்று) அவ் 32 பாடசாலை அணிகளினுள்ளும் நான்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டன. திருமலை நகரத்திலிருக்கும் அவ் நான்கு பாடசாலைகளுக்குள்ளும் தி/ புனித மரியாள் கல்லூரியும் ஒன்றாகும்.

அடுத்து கொழும்பில் நடந்த இரண்டாவது தெரிவுச் சுற்றிலே ஏனைய மூன்று பாடசாலை அணிகளும் போட்டியிலிருந்து நீக்கப்பட "கிரிக்கெட் விளையாட்டில் இன்னமும் கனவான் தன்மை பேணப்படுகின்றது". என்ற தலைப்பில் வாதப்போர் புரிந்த மரியாள் கல்லூரி அணி தேசிய ரீதியாக தெரிவான 16 அணிகளுள் திருமலை மாவட்ட அணியாக பங்கேற்கிறது.

இயல்பாகவே நாவன்மையும், பேச்சுத்திறனும், விசாலித்த அறிவும் கொண்ட இவ் அணியில் காணப்படும் மாணவிகள் ஏலவே பல அரங்கப் போட்டிகளில் தம் இயலுமையை வெளிப்படுத்தியவர்கள். தொடர்ந்து மிகக் கடினமாக பயிற்சியில் ஈடுபட்டு வரும் இவர்கள் தம் பாடசாலையை பெருமைப்படுத்துவதற்காக இந்நிகழ்வில் வெற்றியாளர்களாக வேண்டுமென விரிக்கின்றனர். இனி அம் மாணவிகளின் தனிப்பட்ட அறிமுகக் குறிப்புக்களை நோக்கலாம். (புகைப்படத்தில் இடமிருந்து வலமாக)

1. கஜேந்தினி விநாயகமூர்த்தி - 2014 வணிகப்பிரிவு, 2010 மாகாணமட்ட விவேகானந்தர் தினத்தில் பேச்சுப்போட்டியில் 2ம் இடம் பெற்றவர்.

2. நிதர்ஷினி மதிபாலசிங்கம் - 2013 வணிகப்பிரிவு, 2011 தேசிய மட்ட தமிழ்தினப் போட்டியில் பேச்சுப் போட்டியில் பிரிவு 4 இல் 2ம் இடம் பெற்றவர்.

3. ஷர்மினி ஞானசம்மந்தர் - 2013 வணிகப்பிரிவு, 2010 மற்றும், 2012 தேசிய சாகித்ய விழாவில் பேச்சுப் போட்டியில் முறையே 2ம் மற்றும் 3ம் இடம் பெற்றவர்.

4. விதுர்ஜா பேரானந்தம் - 2013 கணித பிரிவு, 2010 நடந்த தமிழ்தினப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடம் பிடித்த கல்லூரி விவாத அணியின் தலைவர்.

5. தாட்ஷாயினி சண்முகநாதன் - 2013 கணித பிரிவு, 2010,2011 மாவட்ட மட்ட தமிழறிவு போட்டியில் 2ஆம் இடம் பெற்றவர்.

இவர்களது மிகுந்த திறமையான வாதத்திறனுக்கு பலர் வலுச் சேர்ப்பதாக கூறும் இம் மாணவிகள் புனித மரியாள் கல்லூரி அதிபர் அருட்சகோதரி M.நிரோசா A.C. மற்றும் தமது பெற்றோரின் ஆதரவை கண்டு உளப்பூரிப்படைவதாக கூறுகிறார்கள். மற்றும் தம்மை இப்போட்டிக்கு தயார்படுத்தும் நடவடிக்கையில் ஓய்வு பெற்ற உதவி அதிபர் திருமதி. சந்திரகாந்தன் ஆசிரியர்களான, திருமதி. ஜெகதாசன், திருமதி. பாலேந்திரன், திருவாளர் அலிசப்ரி போன்றோர் ஈடுபடுவதாக கூறும் இம் மாணவிகள் வெளி வளவாளர்களென திரு. ஸ்ரீ ஞானேஸ்வரன் மற்றும் திரு. ஜோன்சன் போன்றவர்களைக் குறிப்பிடுகின்றார்கள்.

மூன்றாவது சுற்றிலே "சிறந்த கற்றல் சமூகத்தை அதிகம் உருவாக்குவது கிராமம், கிராமம் இல்லை" என்ற தலைப்பிலே தயார்படுத்தலை மேற்கொண்டு வரும் இவ் அணியினருக்கு எமது பிரதேச கல்வியியலாளர்களின் ஆற்றுகை. இவர்கள் வெற்றியை உறுதி செய்வதற்கான ஆதாரப்படுத்தல்களாய் அமையும்.

இப் போட்டியில் தமக்கு பல தடைகள் இருப்பதாக கூறும் இவ் நாவழகிகள் எதுவாய் இருப்பினும் வெற்றி இருக்குமிடம் தேடி வீறுநடை கொள்ளப்போவதாக கர்ச்சிக்கிறார்கள். எமது திருக்கோணமலையின் தேசிய பிரதிநிதிகளாக மாறியிருக்கும் இவர்களை "தடை தகர்த்து தாம் உயர்வீர்" என்று மலைமுரசு வாழ்த்துவதோடு புயலெனப் புறப்பட்ட புதுமைப் பெண்களைப் பாராட்டுகின்றது.

## இவ்வாரம் கவிஞர் சுபத்திரனின் இரு கவிதைகள்

### நாங்கள் மூடக் கிழவனின் பேரப்பிள்ளைகள்.

எழுபத்தியொன்று
ஏப்ரலின் பின்
பரிநிர்வாண முற்ற
முன்னை நாட் புரட்சிவாதிகளின்
பிச்சாபாத்திரத்தில்
துரோகச் சில்லறைகள்
நிறைந்து கிடக்கின்றன
அரசு நிழலில் இவர்கள் பெற்ற
"ஞானோத"யத்தை
சுமந்து கொண்டு
வேகமாக
மகிந்தர்களும்
சங்கமித்திரைகளும் - தங்கள்
தேவ நம்பியதீசனுகளைத் தேடி
புறப்பட்டுள்ளனர்
ஆனால் - நாங்கள்
எங்கள் சிதைவுகளிலும்
இடிபாடுகளிலும்
உங்கள் அரசுக் கிளைகளின்
வேர்களை
ஓடவிட மாட்டோம்
நாங்கள்
புதிய கற்களால்
புதிய சாந்தால்
புதிய உருக்கால்
புதிய கோட்டையை
நிர்மாணித்துக் கொண்டிருக்கின்றோம்
நாங்கள்
மலைகளை அகற்றிய
மூடக்கிழவனின்
பேரப்பிள்ளைகள்

### காலம் நெருங்குதடா

கோடித் தலையுடன் சீறி வருங்கடல்
கோபம் உன் கோபமடா - தோழா
வாடி உழைத்திடும் போது எரிமலை
வாயுனதுள்ளமடா - குடில்
தேடிக் கிடந்திடும் துன்பமரிந்திடத்
தோழா எழுந்திடுவாய் - பல
கோடிப் புலி ஒரு யானையென உரு
கொண்டது.

வையமெல்லாம் ஒருகையினுள் வைத்திடும்
வேகம் படைத்தவனே
எழுந்திடும் கோலம் படைத்திடக்
காலம் நெருங்குதடா - ஒரு
பொய்மையிலா உயர் பூமியொன்றாகிடப்
பொங்கிடுவாய் மலைகள் - சரம்
எய்ய எழுந்து நடந்தனவோ - என
எட்டி நடந்திடடா.

## மலைமுரசை வாழ்த்துகின்றேன். . .

(சி.அம்பலவாணர், கடல்முக வீதி, திருக்கோணமலை)

### நாளை நமதே

மலை முரசு வருகவே மறைந்திடாமல் வருகவே
நிலைத்து நின்று வருகவே நீண்டகாலம் வருகவே
பல இதழ்கள் வந்துள பாதியில் மறைந்துள
நலம் அவைகள் தந்துமே நம்பிக்கை வீணானதே
தனித்து நின்ற நம்மவை தளர்வடைந்து போகுதே
திணிக்கிறார்கள் மொழியினம் சேர்ந்தழிந்து போவதா
காலம் போன போதும் நாம் கண் திறத்தல் அவசியம்
ஞாலம் நீதிப்பக்கமே நாளை நமது உரிமையே

## இலவசக் கவிதைப் பயிற்சிப் பட்டறை

கலை கலாசார அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் (அரங்காடல் குழுவினர்) இலவசக் கவிதைப் பயிற்சிப் பட்டறை வருகின்ற செப்டம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றவிரும்பும் இளையோர் உங்கள் சுயவிபரங்களோடு சிறிய புகைப்படம் (விரும்பினால்) என்பவற்றை அண்மையில் எழுதிய கவிதையொன்றோடு இணைத்து மலைமுரசின் ஆசிரியர்பீட முகவரிக்கு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முதல் (14.09.2012) கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**வருந்துகிறேன்...**

கடந்தவார அறிமுகத்தில் லவக்குமார் ரிஷிகேசன் தொடர்பாக வெளிவந்த பந்தியில் ரிஷிகேசன் தாய்வானில் பதக்கம் பெற்றார் என்பதும் அருட்தந்தை அன்ரனி பொன்ஷியன் புனித சூசையப்பர் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் என்றும் தவறுதலாகக் குறிப்பிட்டமைக்கு வருந்துகிறேன்.

ரிஷிகேசன் தாய்வான் சென்றமைக்கான சான்றிதழைப் பெற்றிருந்தார் என்பதையும் அருட்தந்தை அன்ரனி பொன்ஷியன் புனித சூசையப்பர் கல்லூரியின் தற்போதய அதிபர் என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- செம்பியன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன மனிதவர்க்கத்தின் மூல இனம் எது??
# இன்றுவரை புரியாத புதிரே!

“மனித வர்க்கத்தின் பரிணாம வளர்ச்சிப் பாதையில், நவீன மனிதனின் உருவாக்கம் வரையில் மில்லியன் ஆண்டுகளாய் அறியப்பட்ட மனித இன வகைகள், எவ்வகையில் அமைந்திருந்தன? என்ற நமது பரிணாம வளர்ச்சி பற்றிய மிக முக்கியத்துவம் பெற்ற கேள்விக்கு Fred spoor என்ற விஞ்ஞானியின் கண்டறிகைகள் விடை கூறுகின்றன” என்கிறார் அறிவாளர் Leaky.

இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக நவீன மனிதனின் முன்னோடிகள் குறைந்தது இரண்டு இன வகையினருடன் வாழ்ந்திருக்கின்றார்கள் என இற்றைக்கு சுமார் இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய மனித இன எச்சங்களின் சான்றுகளுடன் கூடிய அதிர்ச்சி தரும் புதிர் ஒன்றினை வெளியிட்டுள்ளார், ஆய்வாளர் Fred Spoor.

‘Nature’ என்ற Jurnal (பருவ இதழ்) எமது மூதாதையர்களின் பரிணாம வளர்ச்சிப் பயணம் பற்றிய இவரது கண்டறிக்கைகளை வெளியிட்டது.

நிமிர்ந்த நடை கொண்ட முதல் ஆரம்பகால மனிதன் ‘Homo erectus’ எனப்படுகிறான். மற்றும் அவனோடு தொடர்புள்ளதும் கருவிகளை முதன்முதலில் பயன்படுத்தப் பழகிக் கொண்டதுமான முதல் மனிதன் ‘Homo habilis’ எனப்படுகிறான் அதே வேளை இவர்களை விட காலத்தால் முந்திய மனித இனமாக கருதப்படுகின்ற ‘Homo rudoltensis’ என்ற இனமும் பெரும்பாலும் சம காலத்திற்குரியவையே என கருத்துத் தெரிவிக்கின்றனர். விஞ்ஞானிகள்.

வடக்கு கென்யா பகுதியில் தோண்டியெடுக்கப்பட்ட ‘Pleistocene காலம்’ என்ற காலகட்டத்தின் மனித இன எச்சங்களான பல், முகம் மற்றும் தாடைப்பகுதிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, “மனித இன பரிணாம வளர்ச்சிப் பாதையானது நிச்சயமாக ஒரு நேர்கோட்டுப் பாதையுடையது அல்ல” என்கிறார் விஞ்ஞானி. Fred Spoor! இந்த கண்டறிகைகள் கருத்துவாக்கங்கள் மற்றும் பலவித ஊகங்களின் விளைவுகளால் வந்த ஆர்வத்தூண்டுதல்கள், இது தொடர்புள்ள மேலும் பல அகழ்வுகள் மற்றும் ஆய்வுத் தேடல்களுக்கு வேகமாக இட்டுச் சென்றதன் விளைவாக இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்த தட்டையான முகமும் பெரிய அளவிலான மூளையும் கொண்ட ‘Hominid’ (ஆரம்பகால மனிதன்) இனது என்று கருதப்படுவதாகிய KNM-ER 1470 (சுருக்கமாக , 1470) மண்டையோடு கண்டறியப்பட்டது.

ஆயினும் துரதிஷ்டவசமாக இந்த எச்சசான்றுகளில் ஆய்வுகளுக்கான முக்கியமாகிய கீழ்த்தாடை எலும்பு இல்லாதிருந்தமை, இது பற்றிய தெளிவான ஆய்வுக் கருத்துகளையோ, முடிவுகளையோ பெற்றுக் கொள்வதற்கு இடையூறாக அமைந்தது.

ஆனாலும் அதிஷ்டம் நம்மைத் தொடர்ந்து கைவிடவில்லை அதே 1470 வகையைச் சேர்ந்த மூன்று வருட காலங்களுக்குள் அதே பிரதேசத்தின் 10km சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. இந்த இரண்டு வெவ்வேறு எச்சங்கள், 1.78 மில்லியன் மற்றும் 1.95 மில்லியன் பழைமை வாய்ந்தவையாகும்.

ஆயினும் அந்தோ! மீண்டும் ஆய்வுகளின் வேகத்தில் தடங்கல்கள் அந்த மண்டையோட்டு எச்சங்களிலும் கீழ்த்தாடை எலும்பும், பற்களும் இருக்கவில்லை.
இருந்தாலும், விஞ்ஞானம் எந்த விதத்திலும் சளைத்துவிடவில்லை அந்த எச்சங்களை ‘நைரோபி’ யிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் ‘ஸ்கான்’ (scan) செய்து, அவற்றோடு மிகத் தத்ரூபமாக பொருந்தும் வகையில் கீழ்த்தாடை மற்றும் பற்களை இணைத்து ஆய்வுகளைத் தொடர்ந்தது. முடிவு வெற்றியே! கிடைத்தது பூரணமான மண்டையோட்டுப் பகுதி மட்டுமல்ல அந்த எச்சமானது ‘Homo rudolfensis’ இனத்திற்குரிய அம்சங்களை அதிகளவில் கொண்டிருந்தது என்ற அதிர்ச்சியூட்டும் ஸ்வாரஸ்யமிக்க தகவலும் கூடத்தான்! எனவே இந்த ஆய்வு முடிவுகள் மனித பரிணாம வளர்ச்சியில் போட்டியாகவும் உருவாக வழிகோலியுள்ளனவல்லவா? இதன் காரணம் 1470 ஆனது இயல்புக்கு மாறான அசாதாரண முடிவுகளைத் தந்துள்ளமையே.

தரவுகளினடிப்படையில் கூறுமிடத்து ஆய்வுகளின் முடிவானது இந்த எச்சமானது முற்றிலும் வேறுபட்ட ஒரு இனம் என்பதை மட்டுமன்றி இதே வகை இனம் தான் பரிணாம வளர்ச்சி பெற்று நவீன மனிதனாய் ஆகியது என்ற கருத்தினை உருவாக்குவதாகவும் அமைந்துள்ளது.

இவ்வடிப்படையில் கூறுமிடத்து மூவகை இனங்களும் மேலும் வேறுபட்ட உணவு வகைகளையும் கொண்டிருந்தன என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

“அதேவேளை ஆறு மில்லியன் ஆண்டுகால பழமைவாய்ந்ததாக கருதப்படும் மனித இனமானது மிக சிக்கல் நிறைந்த மூலங்களையும், அடிகளையும் கொண்டிருந்த அதே வேளை அவை பரிணாம விருத்தி பெறும் பாதையை குறித்த முறைமைக்குட்பட்டதாக கொண்டதாயுமிருந்தது” எனவும் வேறு சில ஆய்வாளர்கள் ஊகங்களைத் தெரிவிக்கின்றனர்.

மேலும் பல ஆய்வானது கருத்துக்கள் ‘Homo erectus’ என்பது ‘Home habilis’ என்ற இனத்தினது விருத்தியும், வளர்ச்சியுமே என்றவாறாக அமைகின்ற அதே வேளை வேறு சில அதிகாரபூர்வ வட்டாரங்கள் இவையிரண்டும் சகோதர இனங்களே என்ற கருத்தினை வற்புறுத்துகின்றன.

எதுவாயினும் இந்த ஆரம்ப மனித இன எச்சங்கள், “தற்கால நவீன மனிதனின் ஆரம்ப இனமானது, இற்றைக்கு இரண்டு மில்லியன் ஆண்டு காலங்களுக்கு முன்னதான காலப் பகுதியில் வாழ்ந்தவை என்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவி புரிகின்ற அதே வேளை, ‘Home habilis’ அல்லது ‘Home rudolfesis’ என்பவற்றில் ஏதேனும் ஒரு இனமே ‘Homo erectus’ இனத்தின் பரம்பரை இனமாக இருந்து, பின்னர் அதுவே நவீன மனிதனை, பரிணாம வளர்ச்சியில் தோற்றுவித்திருக்குமா?” என்பது இன்றுவரை உறுதிப்படுத்தப்படாத புதிராகவே உள்ளது?!

**தொகுப்பு : பைரவி**

4ம் பக்க கட்டுரைத் தொடர்ச்சி

வெளியீட்டுரைக்கு அழைக்கும் போது நாகரீகமாக நடந்தவற்றைச் சுருக்கமாகக் கூறி என்னை அழைத்தார்.

வழமை போல நகைச்சுவையாக என் உரையைத் தொடங்கிய நான் முத்தாய்ப்பாக நூலாசிரியர் இன்னும் கற்றுக் கொள்ள நிறைய விசயங்களிருக்கின்றன. அவர் பெற்றுக் கொண்டதிலிருந்து பலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று முடித்தேன்.

நிகழ்வு பொன்னாடை, புகழாடை என எரிச்சலூட்டும் வண்ணம் தொய்ந்தது. நான் மேடையிலிருந்து பார்வையாளர் பகுதிக்கு இறங்கி வந்து விட்டேன். ஏற்புரை ஆரம்பமாகியது நூலாசிரியர் சவுடால்தனமாக கவிதை மூலம் ஏதோ கூறினார். யார் யாரையோ எல்லாம் விளித்தார். நானோ, சஞ்சிகை ஆகியரோ சம்பிரதாயத்திற்குத் தன்னும்... பெயர் குறிப்பிடப்பட வில்லை.

பின்னர் நன்றியுரையாற்ற வந்த பெரும் கவிஞர்தான் ஏலவே எழுதி வந்த கவிதைகளை சவுடால் தனமாக அரங்கேற்றினார். அதிலும் நாமிருவரும் விடுபட்டோம்.

“உடுக்கை இழந்தவன் கை போல் இடுக்கண் களைந்த” எனக்கு கடும் கோபம் வந்தது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை.. என அறம்பாட மனம் அவாவியது அடக்கிக் கொண்டேன்.

எனது உள்ளக்குமறலை அடுத்து நிகழ்ந்த ஒரு நிகழ்வில் பகிரங்கமாகக் கூறினேன்.

“நீங்கள் எத்தனை பெரிய கவிஞர், கதைஞர், எழுத்தாளராகவும் இருக்கலாம்.. முதலில் மனிதர்களாக இருங்கள்.. கவிஞன் மனிதனாக இருப்பவனே கவிஞனாக இருப்பான்” மேற்படி எனது கூற்று பின்னர் செய்திப்பத்திரிகை தலைப்பு பெரிதாக்கி வெளியிடப்பட்டிருந்தது.

சில நாட்கள் கழித்து ஒரு கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் அக்கவிஞரை நான் சந்தித்தேன்.என்னைப் பார்த்து கையசைத்த அவரிடம் “உமக்கும் எனக்கும் எதுவித கதையும் தேவையில்லை முதலில் மனிதனாக இருங்கள்” என காட்டமாக கூறி அவருடன் பேசாது முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டேன்.

என் குணத்தைப் புரிந்து கொண்ட இளம் தலைமுறை என்னை நேசிக்கின்றது. என்மீதான அவர்களது அன்பை நான் மதிக்கிறேன். இந்த வயோதிப காலத்தில் அவர்களது தோளில் கைபோட்டு தெம்புடன் அவர்களோடு நடக்க விரும்பகிறேன். உரையாடிய படி...

எனக்கு யாருக்கும் தலை வணங்கவேண்டிய அவசியமில்லை... அன்புக்கு நான் அடிமை இந்தச் செருக்கு ‘பாரதி’ யிடமிருந்து மானசீகமாக நான் பெற்றுக் கொண்டது.

இது.. மாறவே... மாறாது என் இனிய இளம் நெஞ்சங்களே... மேலும் மேலும் பல விடயங்களை இந்த நாடோடியின் பாடல் வாயிலாக .... நீங்கள் அறிந்து கொள்ளலாம்.. உரையாடுவோம் வாருக்றீர்களா?


**திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்**

விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புக்கள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்



**போன்றவை இடம்பெற வேண்டுமா?**

தொடர்புகளுக்கு

அலுவலகம்-159A,2nd floor,Sea view Road,Trincomalee. 077 018 0218
விளம்பர முகவர்- 58,Vidyalayam Road,Trincomalee. 077 366 3103



மலைமுரசுடன் இலத்திரனியல் தொடர்பாடலை மேற்கொள்ள நீங்கள் அஞ்சலிட வேண்டிய முகவரி
malaimurasu@hotmail.com 0770180218
செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்க 0754252042


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் காப்பாற்றும் சட்டம் புத்தாக்கம் செய்யப்படுகிறது.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் காப்பாற்றும் சட்டத்தில் மேலதிக ஏற்பாடுகளைப் புகுத்துவதற்கு நீதி அமைச்சர் தயாராகி வருகிறார் நீதி அமைச்சின் செயலாளரின் கூற்றுப்படி மந்திரி சபையின் அனுமதி கிடைக்கப்பட்ட பின் இச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றார். மேலும் குற்றவாளிகளைத் தண்டிப்பதிலே குறியாகவுள்ள இக்காலச் சட்டம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களையோ சாட்சிகளையோ பாதுகாப்பதில் போதுமான அளவு அக்கறை கொள்வதில்லை எனக் குறிப்பிட்ட அவர் அதற்காகவே இச்சட்டத்திருத்தம் விரைவில் அமுலாகும் எனக் குறிப்பிட்டார்.

### இலங்கை இராணுவம் இந்தியக் கடலுக்குள் நுழையவில்லை இந்திய மத்திய அரசு (இ.ம.அ)

தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்குவதாக தமிழ்நாட்டு அரசு மேற்கொள்ளும் குற்றச்சாட்டுக்களை இ.ம.அ மறுத்துள்ளது. இந்திய மேலதிக சொலிசிடர் நாயகம் ம.இரவீந்திரனால் மத்திய அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. மேலும் இந்திய மீனவர்களுக்கு எதிரான தாக்குதல் இலங்கையின் நீர்ப்பரப்பிலே நிகழ்வதாகவும் இந்திய மீனவர்களே அத்துமீறுவதாகவும் இவ்வறிக்கை கூறியுள்ளது.

## The Sunday Leader

### நல்லிணக்கக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு 2013ல்

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான நிதி 2013 பாதீட்டில் ஒதுக்கப்படும் என நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். எனினும் எவ்வளவு தொகைகள் அமைச்சுக்களுக்கு வழங்கப்படும் என்பது பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

சனாதிபதியின் ஆணைக்குழுவின் செயலாளரின் கூற்றுப்படி நல்லிணக்க வரைபினைச் செயற்படுத்தும் திட்டம் வெளியிடப்படும் பொழுது அநேகமாக அனைத்து அமைச்சுக்களுக்கும் நிதி தேவையாக இருக்குமென குறிப்பிட்டார். மேலும் நிதிப்பற்றாக்குறையாலேயே தற்போது வரை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த பெருமளவில் அமைச்சுக்கள் முனையவில்லை என்று குறிப்பிட்ட அவர் சில அமைச்சுக்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் குறுங்கால பரிந்துரைகளை அமுல்படுத்த தொடங்கியுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

### கொழும்பின் வான்பரப்பை அழகற்றதாக்கும் தொடர்புக் கோபுரங்கள் தகர்க்கப்படும்.

ஏறக்குறைய 150 தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சிக் கோபுரங்கள் கொழும்பின் வான்பரப்பிலிருந்து அகற்றப்படவுள்ளதாக தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் ஆணையாளர் தெரிவித்தார்.

### 4100 ற்கும் மேற்பட்ட ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஊழல் அறிக்கைகள் சனாதிபதியிடம்

அரசின் உயர் பதவியில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடிகள், ஊழல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இதற்கென நியமிக்கப்பட்ட சனாதிபதி புலனாய்வுப் பிரிவின் அலுவலர் குறிப்பிட்டார். சனாதிபதியின் செயலாளர் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட இவ் அறிக்கையானது கடந்த இரண்டரை வருடங்களாக பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தொகுக்கப்பட்டவையாகும்.

"தாம் விசாரணையின் போது எவ்விதமான அழுத்தங்களுக்கும் உள்ளாகியிருக்கவில்லை" எனக்குறித்த அவ்வலுவலர் விசாரணை அறிக்கையை சனாதிபதியிடம் கையளித்தவுடன் தமது குழுவின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதாகவும் அவ்விசாரணை அறிக்கையில் தாம் குறிப்பிட்டுள்ள எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா இல்லையா என்பது பற்றித் தாம் சிரத்தை கொள்ள வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.

### தாழும் கிரேக்க கப்பலால் கொழும்பின் கடற்கரைக்கு ஆபத்து

Tafaco கப்பலிடும் கம்பனிக்குச் சொந்தமான கிரேக்க கப்பலொன்று குற்றச்சாட்டு ஒன்று தொடர்பாக 2007 லிருந்து கொழும்பு கடற்கரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இக் கப்பலில் முன்னர் பணியாற்றிய பொறியியலாளரின் கூற்றுப்படி இன்னும் ஓரிரு நாட்களில் கடலில் மூழ்கவுள்ள இக் கப்பலில் 1000l இரசாயனமும், 275 தொன் பெற்றோலியமும் உள்ளதாகவும் அவை கடல் நீரில் கலக்குமிடத்து கடலை அசுத்தப்படுத்தி கொழும்பின் கடற்கரை முழுவதையும் பாதிக்கும் எனத் தெரிவித்தார். இதனைத் தடுப்பதற்க உடனடியாக நடவடிக்கை எடுக்காதவிடத்து மாபெரும் கேடு விளையும் எனவும் தெரிவித்தார். இக் கப்பலில் 3000 தொன் இரும்புத் தாது இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### தங்காலையில் 13 வயது பெண் குழந்தையை வன் புணர்ந்தவர்களுக்கு பிணை

தங்காலையில் மிக அதிர்ச்சியை ஏற்படுத்திய வீட்டை விட்டு ஓடி வந்த 13 வயது பெண் குழந்தையை வன்புணர்ந்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகி கைது செய்யப்பட்டிருந்தவர்களுக்கு தங்காலை நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதியளித்துள்ளது. ஆளொருவருக்கு 25000 ரூபா பணப்பிணையில் இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

## The Sunday Times:

### ஆவணப்பரிமாற்றுத் தலைவர் பதவி விலகினார்

ஆவணப்பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (ஆ.ப.ஆ) தலைவரினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் 17 முறைகேடுகள் மீதான விசாரணை இறுதிக்கட்டத்தை அடைந்ததால் அப்பதவியிலிருந்து விலகிய ஆணைக்குழுவின் தலைவர் திலக் கருணாரத்னவின் பதவி விலகல் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் (IMF) கூடிய கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது. தனது பதவிவிலகலைத் தொடர்ந்து **Sunday Times** க்கு அளித்த பேட்டியில் தாம் ஆவணப்பரிமாற்று ஒழுங்குமுறைகளில் கூடியளவு கருத்துடையவனாய் இருந்தாலும் அதனால் கடுங்குற்றச்சாட்டுகள் தன்மீது சுமத்தப்பட்டுள்ளதாலும் தாம் பதவி விலக நேர்ந்ததாக தெரிவித்தார்.

இதே காரணங்களுக்காகவே 2011 டிசம்பரில் அப்போதய ஆ.ப.ஆ வின் தலைவரும் பதவி விலக நேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதொரு கவலை தரத்தக்க செயற்பாடு என்பதுடன் உறுதியான தலைவர்களை ஆ.ப.ஆ அடுத்தடுத்து இழந்து வருகின்றது எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

ஆவணச் சந்தையினுள் முறைகேடுகளை உள்ளகப் பரிமாற்றங்களும் நிகழ்ந்ததை உறுதிப்படுத்தும் விசாரணைகளை முன்னெடுத்த ஆ.ப.ஆ முதலீட்டாளர்கள், தரகர்கள், நிறுவனங்கள் போன்ற 17 வகையினரின் மீதான விசாரணை முடிவறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அப்பதினேழு வகையினுள்ளும் உள்ள உயர்வலுக் கொண்ட பிரமுகர்கள் சனாதிபதிக்கு ஆ.ப.ஆ தொடர்பாக கோள்மூட்டியிருந்தனர்.

இலங்கையின் விளையாட்டமைப்பொன்றின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டுள்ள வலு நிறைந்த வர்த்தகப் புள்ளி ஒருவரும் அரச நிறுவனமொன்றின் தலைவர் ஒருவரும் இப்பதினேழு அமைப்புக்களில் உள்ளடங்குவதுடன் தேசிய சேமிப்பு வங்கிக்கும், The finance Company க்கும் இடையே நடந்த பங்கு வர்த்தக ஊழலும் இதனுள் உள்ளடங்குகின்றது. ஆ.ப.ஆ வினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அறிக்கை பொது முயற்சிகளின் மீதான பாராளுமன்றக் குழுவின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### சாப்பாட்டுக் கடைகளில் தண்ணீர் குடிக்காதீர்கள்

கொழும்பு மாநகர சபை மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கைகளில் கொழும்பு உணவகங்களில் வழங்கப்படும் நீரைக் குடிக்க வேண்டாம் என அறிவித்துள்ளது. குழாய்க் கிணறுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் அசுத்தமான தண்ணீரே மக்களுக்கு குடிப்பதற்காக இச்சாப்பாட்டுக் கடைகளில் வழங்கப்படுவதாகவும் அவை நெருப்புக் காய்ச்சலைப் பரப்பும் கிருமிகளைக் கொண்டிருப்பதாகவும் கொழும்பு மாநகர சபையின் மருத்துவ உத்தியோகத்தர் தெரிவித்தார்.

### சனாதிபதியின் இளைய மகனுக்கு அழைப்பு

சனாதிபதியின் இளைய மகன் றோகித்த ராஜபக்ஷவை ரஷ்ய பிரதமர் தமது வானோட முகவர் நிலையத்திற்கு (Aero space agency) விண்வெளி கற்கைகளை மேற்கொள்ள வருமாறு அழைப்புவிடுத்துள்ளார்.

## வேலைவாய்ப்புகள்

**Lanka Orix Leasing Company – LOLC**

சந்தைப்படுத்தல் அலுவலகர்/ சிரேஷ்ட சந்தைப்படுத்தும் அலுவலகர்/ கனிஷ்ட சந்தைப்படுத்தல் அலுவலர்

க.பொ.த. உயர்தரம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக பட்டம். கணனி அறிவு, ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்

அறவீட்டு அலுவலகர்/ பயிற்சி அறவீட்டு அலுவலகர்
க.பொ.த உயர்தரம்
1-2 வருட அனுபவம்

விண்ணப்பிக்கும் முறை : சுயவிபரக்கோவையை
careers@lankaorix.com ற்கு இலத்திரனியல் அஞ்சல் செய்யவும்.
அல்லது
ஆட்சேர்ப்பு நிலையம் - LOLC குழு
# 100/1, ஸ்ரீஜெயவர்த்தனபுர மாவத்த, ராஜகிரிய.

**Community Business Technology Developers (Gte) Ltd.**

மாவட்ட இணைப்பாளர் - திருக்கோணமலை மாவட்டம்.
விசேடமாக வலுவிழந்தோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கம் கொண்ட திட்டத்திற்கு இப்பதவி வெற்றிடமாகவுள்ளது.

பல்கலைக்கழக பட்டத்துடன் 3 வருட அனுபவம் அல்லது
க.பொ.த உயர்தரத்துடன் 7 வருட அனுபவம்
ஆங்கிலம்/ தமிழ்/ சிங்கள மொழிகளில் தொடர்பாடும் திறன்
31.08.2012 க்கு முன் சுயவிபரத்துடன் விண்ணப்பிக்கவும்.

The Chairman,
Community Business Technology Developers (Gte) Ltd.
#20, Orr's lane, Linganagar, Trincomalee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் காங்கிரஸ்...

த.தே.கூட்டமைப்புடன் இணைதல் என்பது ஸ்ரீ.மு.கா பெரும் சவாலாகவே இருக்கும். ஏனெனில் இரு கட்சிகளும் அதிகாரங்களை சம அளவில் கிழக்கு மாகாண சபையில் பகிர்வதிலேயே குறியாக இருக்கும். ஆனால் ஸ்ரீ.மு.கா அரச கூட்டணியுடன் இணையும் போது அது தற்போது பெற்றுள்ள அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகளுக்குப் பங்கம் ஏற்படாமல் விட்டுக்கொடுப்புப் பகிர்வினை நடத்த ஏதுவாக இருக்கும் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

## அந்தரத்தில் அவுஸ்திரேலிய...

இவர்களை அவுஸ்திரேலியாவிற்குக் கடத்த முனைந்த முகவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர் சுமார் ரூபா 450,000 மேல் ஒவ்வொருவரிடமும் அறவிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அம்முகவர் கைது செய்யப்பட்டாலும் அரை வருடமோ ஒரு வருடமோ சிறையிலிருந்து விட்டு வெளியில் வந்து சுகபோக வாழ்க்கை வாழ முடியும் எனவும் நீதிமன்ற வாசலில் நின்ற இள வயதுடையவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

அவுஸ்திரேலியாவை நோக்கிப் படையெடுக்கும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை மனுஸ் தீவுகளுக்கும் நவுறு தீவுகளுக்கும் அனுப்பும் சாத்தியப்பாடுகளை அவுஸ்திரேலிய அரசு ஆராய்ந்து வருகின்றது. மனுஸ் தீவுகள் பப்புவா நியூகினிக்கு மேலாக உள்ள தீவுகளாகும். அவ்வாறே நவுறு தீவுகள் சொலமன் தீவுத் தொகுதிக்குள் உள்ளடங்கும் ஓர் தீவாகும். நவுறு தீவுகளுக்கு அனுப்பப்படும் குடியேற்றவாசிகள் சம்பளம் பெறும் வேலைகளைச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் இரவு நேரங்களில் வெளிச் செல்லவும் தடை விதிக்கப்படும் என நேஷனல் டைம்ஸ் பத்திரிகைச் செய்தி குறிப்பிடுகின்றது.

## கையளித்தனர் படையினர்...

ஜனாதிபதியின் திருக்கோணமலை இணைப்பாளரும் முன்னாள் கூட்டுறவு துறை பிரதி அமைச்சருமான நஜீப் ஏ அஜீது மேற்கொண்ட முயற்சி காரணமாக இந் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.
பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் சகிதம் கருமலையூற்றுக்கு சென்று இதனை பொது மக்களின் வழிபாட்டுக்காக வழி ஏற்படுத்திக் கொடுத்தார். முன்னாள் அமைச்சரின் இந் நடவடிக்கை பிரதேச மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஆனந்தபுரியில்...

இக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் நாங்கள் அரசியல் ரீதியாக எம்மைப் பலப்படுத்திக்கொள்ள கட்டாயத் தேவையொன்று எமக்கிருக்கின்றது. எங்களை நாங்களே ஆள்வதற்கு எங்களை நாங்கள் பலப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான சந்தர்ப்பமாக இந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தன்மானத் தமிழர்களாகிய நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியினை நாங்கள் அனைவரும் சென்று வாக்களிப்பதன் மூலம் உறுதி செய்ய வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிச் செல்லும் ஒவ்வொரு வாக்குகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆசனங்களைக் குறைப்பதற்கான சூழ்ச்சி என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அக்கூட்டத்தில் த.தே.கூ வினர் தெரிவித்தனர்.

## அகதியானார் அஸென்ச்

விக்கிலீஸின் ஸ்தாபகர் ஜுலியன் அஸென்ச் இங்கிலாந்திலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அகதியாகக் காலம் கழிக்கிறார். இவரைச் சுவீடனுக்கு நாடுகடத்தும் இங்கிலாந்தின் தீர்மானத்தை தவிர்ப்பதற்காக அவர் அகதியாகியுள்ளார். இங்கிலாந்தில் நாமெல்லோரும் அகதி அந்தஸ்து கோருவது என்பது தான் இன்றுவரை நாம் அறிந்தது. ஆனால் உண்மைகளை வெளிக்கொணர்வதற்காக இங்கிலாந்திலிருந்து ஒருவர் அகதியாகுவது வரலாற்றில் இதுதான் முதல் தடவையாக இருக்கலாம்.

## Skype வலைப்பின்னல் தொடர்பாடல் முறைமை சட்டவலைக்குள் வீழுகின்றது.

தற்போது வரை skype மூலம் தொடர்பாடலை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களின் தொடர்பாடலை சட்டத்தேவைகளுக்காக வழங்க மறுத்து வந்த skype தற்போது அதனை சட்டத்தேவைகளுக்காக வழங்க முன்வந்துள்ளது. Skype இனை பயங்கரவாதிகள் தற்போது வரை பாதுகாப்பான தொடர்பூடகமாக பயன்படுத்தி வருவதனால் இதனை மேற்கொள்வதாக skype அறிவித்துள்ளது.


வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள்.
வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

தொடர்புகளுக்கு:
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி, திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com, 0754252042
58, வித்தியாலயம் வீதி, திருக்கோணமலை.


## திருமலையில் இப்தார் நிகழ்வு

ரமழான்மாத நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வையும் திருகோணமலை மாவட்ட மௌலவிமார் மற்றும் உலமாக்களுடனான விசேட சந்திப்பையும் திருகோணமலையில் உள்ள இராணுவத்தின் 22ஆவது படைப்பிரிவின் தலைமையகம் பிளான்டன் பொயின்ட் இராணுவ முகாமில் செவ்வாய்க்கிழமை நடத்தியது.

கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால்பெரேரா முதன்மைவிருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக 22ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் மஹிந்த ஜெயசூரியவும் மற்றும் மூதூர், கிண்ணியா, குச்சவெளி, புல்மோட்டை பிரதேசங்களைச் சேர்ந்த மௌலவிமார்கள், உலமாக்கள் கலந்துகொண்டனர்.

## முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து த.தே.கூட்டமைப்பு ஆட்சியமைக்கும்: இரா.சம்பந்தன்

கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்குமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு இங்கு கூறினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய இரா.சம்பந்தன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கணிசமான ஆசனங்களைப் பெறும் பட்சத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்போம்.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் நாங்கள் ஏற்னவே பேசினோம். எங்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் ஒரு தொடர்பு இருக்கின்றது. அந்த வகையில் கிழக்கு மாகாண சபையில் கணிசமான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைப்போம்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தோம்.

இந்தப் பேச்சு வார்த்தைகளில் இருந்து அரசாங்கம் நழுவிச்சென்றதே தவிர நாங்கள் இதிலிருந்து நழுவிச் செல்லவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினை சர்வேதசத்திற்குச் சென்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கும், ஜெனிவாவுக்குமாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்று சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இந் நிலையில் அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பை அரவணைக்க வேண்டிய நிலையிலுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்று சர்வதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டது என்றால் அதற்கு முழுக் காரணமும் தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பது அனைவருக்கும் தெரியும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் 85 சதவீதம் வாக்களிக்க வேண்டும். அவ்வாறு வாக்களிக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு 8 உறுப்பினர்களையும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து 5 உறுப்பினர்களையும், அம்பாறை மாவட்டத்திலிருந்து 3 உறுப்பினர்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஏன் நடத்தப்படுகின்றது ,எதற்காக நடத்தப்படுகின்றது என்பது மக்களுக்கு நன்கு தெரியும். ஆகவே தான் இந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அனைத்து தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டும் என அவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்த சங்கரி, புளட் இயக்கத்தின் தலைவர் சித்தார்த்தன், டெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, பி.அரியநேந்திரன், சி.யோகேஸ்வரன் உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## உலவுகின்றன இரு அனாமதேயக் கடிதங்கள்

திருக்கோணமலை மாவட்ட வாக்காளர்களே! எனத் தலைப்பிடப்பட்ட கடிதங்கள் அனுப்பியவரின் முகவரியின்றிக் கிடைக்கப்பெற்றுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 'வாக்காளர்களைச் சாதிவெறி பிடித்தவர்களாக சித்தரிக்கும் இக் கடிதம் தமிழ் பேசும் மக்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

'வீட்டுக்கு வாக்களியுங்கள்'
நாம் தமிழர் அமைப்பு

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையோர் என்றும் உரியர் பிறர்க்கு' எனத் தலைப்பிடப்பட்ட நாம் தமிழர் அமைப்பின் கடிதம் / துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது.

'ஒரு வாக்குத்தானும் எதிரிக்குச் செல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே' வாக்குகளை வழங்குக என அக் கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருகோணமலை வித்தியாலயம் வீதியில் 58இல் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 26. 08. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.